# 4-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

**முன்னிலை : திரு.C.ராஜலிங்கம்.,பி.ஏ,பி.எல்.,**
**4-வது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**உடுமலைப்பேட்டை**

2025–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 – ம் நாள் செவ்வாய்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2055, குரோதி வருடம் பங்குனி திங்கள் 18–ம் நாள்

IA.No.4/2024
in
O.S.No.159/2024

S.K.சிவராஜ் ......... மனுதாரர்/ 1–ம் பிரதிவாதி

//எதிர்//

1. பாக்கியலட்சுமி,
2. தமிழரசி
3. வசந்தாமணி
4. சித்ரா ..........எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு என் முன்னர் 17.03.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.சுப்பிரமணியன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.இளங்கோவன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரீசிலித்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

மனுதாரர்/1–ம் பிரதிவாதி, அசல் வழக்கை நிராகரிக்க கேட்டு, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 பிரிவு 11 மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர் அசல் வழக்கில் 1–ம் பிரதிவாதி ஆவார். வாதி, அசல் வழக்கில் பாகப்பிரிவினை மற்றும் பட்டா மாறுதல் செய்ய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் பட்டா பாஸ் புத்தக சட்டம் 4/1986 பிரிவு 5,6 மற்றும் 10–ன் படி பட்டாவில் ஏதாவது மாறுதல் அல்லது பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்றால் வருவாய்துறையினர் மூலம் தான் மனு

கொடுத்து தீர்வு காண முடிவும். அந்த வகையில் வாதிகள் 25.01.2023 அன்று மடத்துக்குளம் தாசில்தாரிடம் மனு கொடுத்து நிறுத்தி வைத்ததாக கூறப்பட்டுள்ளது. 03.02.2023 ம் தேதியில் 4-ம் வாதியின் விண்ணப்பத்தின் பெயரில் 4-ம் பிரதிவாதியானவர் உத்தரவு செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. மடத்துக்குளம் தாசில்தாரர், உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் ஆகியோர் வாதிகளின் மனுக்கள் பெயரில் பட்டா மாறுதல் செய்வதை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**2.2)** வாதிகள் திருப்பூர் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்யவேண்டும். வாதிகள் மேல்முறையீடு தாக்கல் செய்யாமல் விட்டுவிட்டு உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியாது. பட்டா பாஸ்புத்தக சட்டம் பிரிவு 12-ன் படி வருவாய் துறையினருக்கு மேல்முறையிடு தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. வாதிகள் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்ய பட்டா பாஸ்புத்தக சட்டத்தின்படி தடைபடுத்தப்பட்டுள்ளனர். வாதிகளின் வழக்கு நிராகரிக்கப்படவேண்டும். எனவே வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு பட்டா பாஸ் புத்தக சட்டம் 1983, தமிழ்நாடு சட்டம் 4/1986 பிரிவு 14-ன் படி தடை செய்யப்பட்டுள்ளதால், வாதிகளின் வழக்கு நிராகரிக்க வேண்டிய அவசியமும், நியாயமுமாய் உள்ளது. அல்லாத பட்சம் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே, அசல் வழக்கை நிராகரித்து உத்தரவிடக்கேட்டு, மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 4-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் உரையின் சுருக்கம்:**

**3.1)**மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. 4-ம் எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனுதாரர் தாக்கல் செய்த மனுவில் குறிப்பிட்ட எந்த பிரிவின் அடிப்படையில் வழக்கு நிராகரிக்கப்படவேண்டுமென கூறவில்லை. அதனடிப்படையில் மனு நிலைக்கத்தக்கதல்ல. பாகம் மற்றும் உறுத்துக்கட்டளை கோரி தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளநிலையில் மனுதாரர் கூறியுள்ள காரணங்களின் அடிப்படையில் வழக்கு நிராகரிக்கத்தக்கதல்ல. மனுதாரர் அசல் வழக்கில் விவரப்பத்திரக்கை தாக்கல் செய்வதில் காலம் தாழ்த்தவே மனு

தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் கூறும் சட்டப்பிரிவு எதிர்மனுதாரர்களின் வழக்கிற்கு பொருந்தாது. எனவே மனு தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதைக் காண்பதேயாகும்.

**5. தீர்வு:–**

இருதரப்பு வாதுரைகளையும் கவனமாக பரிசீலனை செய்து பார்க்கும் போது, அசல் வழக்கின் வாதிகள் மற்றும் 1,2 பிரதிவாதிகள் பெயரில் கூட்டாக பட்டா மாற்றம் செய்து உத்தரவிட வேண்டும் என்று பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றும் பட்டா பாஸ்புத்தக சட்டம் 14–ன் படி இவ்வாறு பட்டா மாற்றம் செய்வது தொடர்பாக உரிமையியல் நீதிமன்றத்தில் பரிகாரம் கோருவது தடைச் செய்யப்பட்டுள்ளதாகவும் எனவே இந்த வழக்கு நீக்கரவு செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டுள்ளது. அதனை மறுத்து வாதிகள் தரப்பில் வாதிகள் பாக பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதோடு மற்றொரு பரிகாரமாக இவ்வாறு கூட்டு பட்டா குறித்து பரிகாரம் கோரப்பட்டிருந்தாலும், பிரதான பரிகாரம் இந்நீதிமன்றத்தில் கேட்பதற்கு எவ்வித சட்டத்தடையும் இல்லை என்பதோடு அது ஏற்கத்தக்கது என்பதால் கூடுதல் பரிகாரம் கோரியுள்ளதை மட்டுமே வைத்து வழக்கை நீக்கரவு செய்ய முடியாது என்றும் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 பிரிவு 11–ன் படியாக பிரிவில் இதுபோன்ற பரிகாரம் கேட்பது தொடர்பாக எந்த விபரங்களும் கூறவில்லை என்றும் மனு தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

5. இருதரப்பு வாதுரைகளையும் கவனமாக பரிசீலித்து பார்க்கும்போது அசல் வழக்கு வாதிகளுக்குரிய 1/3 பாகம் கேட்டு முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் கோரியும், மேலும் வாதிகள் மற்றும் 1,2 பிரதிவாதிகள் பெயரில் கூட்டாக பட்டா மாற்றம் செய்ய உத்தரவிடவேண்டுமென்று கோரப்படுகிறது.

1–ம் பிரதிவாதி தரப்பில் வாதிட்டுள்ளதை போல பட்டா பாஸ் புத்தக சட்டம் பிரிவு 14–ன்படி பட்டா மாற்றம் செய்வது தொடர்பாக வழக்கு தாக்கல் செய்ய சட்டத்தடை உள்ளது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது.

6. ஆனால் பிரதான பரிகாரமான பாகப்பிரிவினை பரிகாரம்

கோரப்பட்டுள்ளநிலயில் இவ்வாறு பட்டா மாற்றம் தொடர்பான செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளது மட்டுமே அசல் வழக்கை நீக்கரவு செய்ய போதுமான காரணமாக ஏற்றுக்கொள்ள முடியாது. நீதிமன்றம் பிரதான பரிகாரம் வழங்கலாம் என்பதாலும் இதர பரிகாரங்கள் வழங்குவது உசிதமானதா என்பது தீர்மானிக்க முடியும் என்பதால் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள, 2021 (2) MWN (Civil) 230 என்று பதிவாகியுள்ள G.Ramanujam Vs State of Tamil Nadu என்ற வழக்கில்,

> **"Held, extra statutory actions of Authority subject to Civil Court jurisdiction and not barred under section 14 – Violation of Principles of Natural Justice affecting vested rights of individuals produces Civil consequences)"**

என்று காணப்படுவதை பார்க்கும்போது இந்த வழக்கை பொறுத்தவரை பிரதான பரிகாரம் பாகப்பிரிவினை என்பதால் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழக்கின் தன்மையை எவ்வகையிலும் பாதிக்காது என்பதையும் கருத்தில் கொண்டு செயலுறுத்து கட்டளை பரிகாரம் மட்டுமே அசல் பரிகாரம் இல்லை என்பதாலும், பாக பிரிவினை பரிகாரம் கோருவதற்கு சட்ட தடை இல்லை என்பதை கருத்தில் கொண்டு, இந்த மனுவை அனுமதிக்க எந்த முகாந்தரமும் இல்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக,**

மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01–ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

C RAJALINGOM

Digitally signed by C RAJALINGOM
Date: 2025.04.01 18:55:39 +0530

4–வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை

**<u>மனுதாரர்தரப்பிலும் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள்:– இல்லை</u>**

**<u>எதிர்மனுதாரர்கள்தரப்பிலும் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள்:– இல்லை</u>**

C RAJALINGOM

Digitally signed by C RAJALINGOM
Date: 2025.04.01 18:55:53 +0530

4–வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை

FAIR/DRAFT ORDER
In
IA.No.4/2024
in
OS.No.159/2024
Date:01.04.2025
IV$^{th}$ ADJ Udt